Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.560/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | பால்ராஜ் |
| Father's Name | : | ராமசாமி செட்டியார் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 07.08.2025.

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் உப்பிடமங்கலத்தில் வசித்து டீ மாஸ்டராக பணியாற்றி வருகிறேன்.

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

விபத்தில் இறந்துபோன தாமோதரன் என்னுடைய மகன் ஆவார். கடந்த 08.07.2021 அன்று இரவு 8.45 மணியளவில் நான் வீட்டில் இருந்துபோது சிவசுப்பிரமணியன் எனக்கு போன் செய்து SPLENDER PLUS இருச்சக்கர வாகனத்தில் புலியூர் –உப்பிடமங்கலம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி முடக்கு சாலை அருகே சென்று கொண்டிருந்தபோது அவருக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த லாரி திடீரேன பிரேக் போட்டு நின்றதால் எனது மகன் லாரிக்கு பின்னால் சென்று மோதிவிட்டார் என்றும் அதில் அவருக்கு முகத்தில் ரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், ஆம்புலன்ஸ் மூலமாக கரூர் அரசு மருத்துவ கல்லுரி மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக தகவல் கூறினார். நான் மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, எனது மகன் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர் கூறியதின் பேரில் அவரது பிரேதத்தை மேற்படி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து வெள்ளியணை காவல்நிலையம் சென்று விபத்து குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் தான் கொடுத்தேன். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மறுநாள் மேற்படி மருத்துவமனையின் சவக்கிடங்கின் முன்பாக இருந்தபோது, அங்கு வந்த போலிவசார் என் மகனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள் நான் உடனிருந்ததேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.</u>

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் கையெழுத்து போடுவேன் படிக்க தெரியும். எழுத தெரியாது. சாட்சி சிவசுப்பிரமணியன் எனது உறவினரா என்றால் என் வீட்டிற்கு பக்கத்து வீட்டுக்காரர். சாட்சிகள் நவின்குமார், தன்ராஜ் ஆகியோர் எனது உறவினரா என்றால் உள்ளூர்க்காரர்கள். விபத்து குறித்து எனக்கு இரவு 8.45 மணிக்கு

தகவல் சொன்னார்கள். உடனே நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். மருத்துவனைக்கு நான் போகும்போது மருத்துவமனையில் வெள்ளியணை போலிசார் அங்கிருந்தார்கள். அப்போது என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. விபத்து நடந்தது பற்றி என்னிடம் போலிசார் கூறினார்கள். அ.சா.ஆ.1 புகாரை நான் தான் கொடுத்தேன். அ.சா.ஆ.1 புகாரை வெள்ளியணை காவல்நிலையத்தில் வைத்து கொடுத்தேன். அ.சா.ஆ.1 புகாரை உதவி ஆய்வாளர் ரெங்கராஜன் என்பவர் எழுதினார். அந்த புகாரில் என்ன விவரங்கள் எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த புகாரை நான் படித்துப்பார்த்தேன். புகார் கொடுக்க நானும், என் மகள் கல்பனா, சிவசுப்பிரமணியன் ஆகியோர் வெள்ளியணை காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். பின்னிட்டு, போலிசார் என் மகனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யும் போது என்னை விசாரித்தார்கள். நான் சொல்வது போல் விபத்து ஏற்படவில்லை என்றும், என் மகனின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை. இறந்துபோனது என் மகன் என்பதால் இழப்பீடு வேண்டும என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை. இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்.
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.560/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | விசித்ரா |
| Husband's Name | : | தாமோதரன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 07.08.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாவட்டம் புஞ்சைசங்கேதியில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன தாமோதரன் என்னுடைய கணவர் ஆவார்.

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

கடந்த 08.07.2021 அன்று இரவு 8.45 மணியளவில் நான் வீட்டில் இருந்துபோது சிவசுப்பிரமணியன் எனது மாமனாருக்கு போன் செய்து எனது கணவர் SPLENDER PLUS இருச்சக்கர வாகனத்தில் புலியூர் –உப்பிடமங்கலம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி முடக்கு சாலை அருகே சென்று கொண்டிருந்தபோது அவருக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த லாரி திடீரேன பிரேக் போட்டு நின்றதால் எனது கணவர் லாரிக்கு பின்னால் சென்று மோதிவிட்டார் என்றும் அதில் அவருக்கு முகத்தில் ரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், ஆம்புலன்ஸ் மூலமாக கரூர் அரசு மருத்துவ கல்லுரி மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக தகவல் கூறினார். நாங்கள் மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, எனது கணவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர் கூறியதின் பேரில் அவரது பிரேதத்தை மேற்படி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து வெள்ளியணை காவல்நிலையம் சென்று விபத்து குறித்து என் மாமனார் புகார் கொடுத்தார். மறுநாள் மேற்படி மருத்துவமனையின் சவக்கிடங்கின் முன்பாக இருந்தபோது, அங்கு வந்த போலிவசார் என் கணவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள் நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.</u>

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை. இறந்துபோனது என் கணவர் என்பதால் இழப்பீடு வேண்டுமெ என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை. இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்.
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.560/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-3 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | சாந்தி |
| Husband's Name | : | பால்ராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 07.08.2025.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை

நான் உப்பிடமங்கலத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பால்ராஜ் எனது கணவர் ஆவார். அ.சா.2 விசித்ரா எனது மருமகள்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

ஆவார். விபத்தில் இறந்துபோன தாமோதரன் என்னுடைய மகன் ஆவார். கடந்த 08.07.2021 அன்று இரவு 8.45 மணியளவில் நான் வீட்டில் இருந்துபோது சிவசுப்பிரமணியன் எனது கணவருக்கு போன் செய்து எனது மகன் SPLENDER PLUS இருச்சக்கர வாகனத்தில் புலியூர் –உப்பிடமங்கலம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி முடக்கு சாலை அருகே சென்று கொண்டிருந்தபோது அவருக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த லாரி திடீரேன பிரேக் போட்டு நின்றதால் எனது மகன் லாரிக்கு பின்னால் சென்று மோதிவிட்டார் என்றும் அதில் அவருக்கு முகத்தில் ரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், ஆம்புலன்ஸ் மூலமாக கரூர் அரசு மருத்துவ கல்லுரி மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக தகவல் கூறினார். நாங்கள் மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, எனது மகன் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர் கூறியதின் பேரில் அவரது பிரேதத்தை மேற்படி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து வெள்ளியணை காவல்நிலையம் சென்று விபத்து குறித்து என் கணவர் புகார் கொடுத்தார். மறுநாள் மேற்படி மருத்துவமனையின் சவக்கிடங்கின் முன்பாக இருந்தபோது, அங்கு வந்த போலிசார் என் மகனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள் நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.</u>

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை. இறந்துபோனது என் மகன் என்பதால் இழப்பீடு வேண்டும என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை. இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்.
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.